Cambridge International A Level

**Cambridge International Examinations**
Cambridge International Advanced Level

**TAMIL** **9689/41**

Paper 4 Texts **October/November 2017**

**2 hours 30 minutes**

No Additional Materials are required.

*8974108388*

**READ THESE INSTRUCTIONS FIRST**

An answer booklet is provided inside this question paper. You should follow the instructions on the front cover of the answer booklet. If you need additional answer paper ask the invigilator for a continuation booklet.

Answer **three** questions, each on a different text. You must choose **one** question from Section 1, **one** question from Section 2 and **one other**.
Write your answers in **Tamil**.
Dictionaries are **not** permitted.
You may **not** take set texts into the examination.

You should write between 500 and 600 words for each answer.
All questions in this paper carry equal marks.

**முதலில் என்ன செய்ய வேண்டும் என்பதைப் படிக்கவும்**

கேள்வித்தாளுடன் விடைகள் எழுதுவதற்கு ஒரு புத்தகம் கொடுக்கப்படும். அதில் முன்பக்கத்தில் என்ன செய்ய வேண்டும் என்று எழுதி இருப்பதைப் பார்த்து அதன்படி செய்யவும். விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க. மேலும் உங்களுக்கு விடை எழுதுவதற்குப் பேப்பர் தேவையாக இருந்தால் மேற்பார்வையாளரிடம் கேட்கவும்.

ஏதாவது மூன்று கேள்விகளுக்கு, வேறு வேறு பாடப் பகுதிகளிலிருந்து கேள்விகள் எடுத்து விடைகளை எழுதவும். முதல் பகுதியில் இருந்து ஒரு கேள்வியும், இரண்டாவது பகுதியில் இருந்து ஒரு கேள்வியும் பகுதி ஒன்று அல்லது இரண்டில் இருந்து மூன்றாவது கேள்வியும் எடுத்து விடைகள் எழுதவும்.
விடைகளைத் **தமிழில்** எழுதவும்.
அகராதிகளைப் பயன்படுத்தக் கூடாது.
பாடப் புத்தகங்களைத் தேர்வு எழுதும் இடத்துக்குக் கொண்டுபோகக்கூடாது.

நீங்கள் ஒவ்வொரு விடையையும் 500 முதல் 600 சொற்களுக்கு இடையில் எழுத வேண்டும்.
எல்லா விடைகளுக்கும் சமமான மதிப்பெண்கள் கொடுக்கப்படும்.

விடைகள் எழுதுவதற்காக கொடுக்கப்பட்ட புத்தகத்தை நிரப்புவது பற்றிய கட்டளைகள் தமிழில் வேண்டுமானால் இந்தக் கேள்வித் தாளின் இரண்டாவது பக்கத்தில் காண்க.


This document consists of **6** printed pages, **2** blank pages and **1** Insert.


© UCLES 2017


https://xtremepape.rs/

**விடைகள் எழுதும் புத்தகத்தில் செய்ய வேண்டியவை**

விடைகள் எழுதும் புத்தகத்தின் முன் பக்கத்தில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதவும்.
கருநீலம் அல்லது கருப்புப் பேனாவால் எழுதவும். எந்த பார்க்கோட்டிலும் எழுதவேண்டாம்.
விடைகளை விடைகள் எழுதும் புத்தகத்தில் எழுதவும். பேப்பரின் இரண்டு பக்கமும் எழுதவும். ஒவ்வொரு கேள்வியின் விடைகளுக்கும் இடையில் இரண்டு இடங்கள் விடவும்.
நீ விடை அளிக்கும் கேள்வியின் நம்பரை முதல் மார்ஜினில் எழுதவும்.




நீ எழுதும் கேள்வி பகுதிகளாக இருந்தால் உதாரணமாக 1a, கேள்வியின் பகுதியை இரண்டாவது மார்ஜினில் எழுதவும். இரண்டாவது விடை எழுதும் புத்தகம் வாங்கி விடை எழுதி இருந்தால் அதையும் முதல் புத்தகத்துடன் சேர்த்து வைக்கவும்.



https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

## பகுதி 1

**1 ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) நற்றிணை**

விழவும் உழந்தன்று முழவுந் தூங்கின்று
எவன்குறித் தனள்கொல் என்றியாயின்
தழையணிந்து அலமரும் அல்குல் தெருவின்
இளையோள் இறந்த அனைத்தற்குப் பழவிறல்
ஓரிக்கொன்ற ஒருபெருந் தெருவிற்
காரி புக்க நேரார் புலம்போல்
கல்லென் றன்றால் ஊரே அதற்கொண்டு
காவல் செறிய மாட்டி ஆய்தொடி
எழின்மா மேனி மகளிர்
விழுமாந்தனர்தங் கொழுநரைக் காத்தே

-- (கபிலர், பாடல் 320)

**(i)** முழவு, கொழுநர் ஆகிய சொற்களின் பொருள் என்ன?

**(ii)** பரத்தையின் கூற்றை கபிலர், மருதத் துறையில் பொருந்தும்படி, எப்படி வருணிக்கிறார்? [25]

**அல்லது**

**(b) சிலப்பதிகாரம்**

கணவனை இழந்த கண்ணகி, பாண்டியன் அவையில் வழக்குரைத்த முறையினை எடுத்துக்காட்டுகளுடன் தரவும். [25]

© UCLES 2017



https://xtremepape.rs/

**2 திருக்குறள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

(a)

உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கிவிடும்

ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்
ஒருவந்தம் கைத்துடை யார்

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை

(i) ஒருவந்தம், அதர்வு என்ற சொற்களின் பொருள் என்ன?

(ii) ஊக்கமுடைமை பற்றி மேற்கூறிய நான்கு குறள்களிலும் ஏனைய குறள்களிலும் வள்ளுவர் வலியுறுத்தும் கருத்துகளை தொகுத்துத் தரவும். [25]

**அல்லது**

(b) கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் பத்துக் குறள்களில் இறைவனின் குணநலன்களை வள்ளுவர் எப்படி எல்லாம் போற்றுகிறார்? [25]



https://xtremepape.rs/

**3 தேவாரம் – அப்பர்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)**

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றம் வெண்டலைகொண்டு
அணிந்தீரடி கேள்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

**(i)** திருநாவுக்கரசர் பாடிய திருவதிகை வீ ரட்டானப் பதிகத்தில் 'சூலை தவிர்த்தருளீர்' – என்று பாடுகிறார். அவருக்கு இந்த நோய் வந்த சூழ்நிலையையும் அதைப் போக்க சிவபெருமானை எப்படி வேண்டினார் என்றும் எழுதவும்.

**(ii)** வெண்டலை, பொடி ஆகிய சொற்களின் பொருள் என்ன? [25]

**அல்லது**

**(b)** திருவதிகை வீரட்டானப் பதிகத்திலுள்ள இலக்கிய நயத்தை எடுத்துக் காட்டுகளுடன் தரவும். [25]

© UCLES 2017

https://xtremepape.rs/

## பகுதி 2

**4 இக்காலக் கவிதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a) பாரதியார்**

'கண்ணன் என் தாய்' என்னும் கவிதையில் தாயார் சொன்ன கதைகள், பாட்டுகள், காட்டிய விளையாட்டுகள், பொம்மைகள் ஆகியன பற்றி பாரதியார் கூறுவது என்ன? [25]

**அல்லது**

**(b) பாரதிதாசன்**

வானம்பாடி என்ற கவிதை, பாரதிதாசனின் சிறப்பான தமிழ்க் கவிதை நடைக்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதை ஏற்கிறீர்களா? உங்கள் பதிலை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும். [25]

**5 நாவல்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** அகிலன் எழுதிய பால்மரக் காட்டினிலே நாவலில், உங்களுக்குப் பிடித்த ஒரு கதா பாத்திரம் யார்? ஏன்? என்று விளக்கிச் சொல்லவும். [25]

**அல்லது**

**(b)** இந்த நாவலில் வரும் வருணனைகளை எடுத்துக் காட்டுகளுடன் தருக. [25]

**6 நவீன தமிழ்ச் சிறுகதைகள்**

**ஏதாவது ஒரு வினாவிற்கு ((a) அல்லது (b)) விடை தரவும்.**

**(a)** ஆசிரியர் அகிலனின் "தாய்ப்பசு" கதை, உங்களுக்குப் பிடித்திருக்கிறதா? உங்கள் கருத்தை நிலைநாட்ட நீங்கள் முன்வைக்கும் காரணங்கள் என்ன? [25]

**அல்லது**

**(b)** அண்ணாவின் "செவ்வாழை" கதையில் அவருடைய மொழி நடை எவ்வாறு இருக்கிறது என்று எழுதவும். இதற்கு என்ன எடுத்துக்காட்டுகள் தருவீர்கள்? [25]

© UCLES 2017

https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.



https://xtremepape.rs/